

# கிறிஸ்துவின்

# இரண்டாம் வருகை

மல்கியா 4:2

யோவான் 17:17

*1.* மேசியாவின் இரண்டாம் வருகையைப்பற்றி வேதாகமம் போதிக்கிறது என்பதை எல்லா கிறிஸ்தவர்களும் ஒப்புக்கொள்வார்கள்.

*2.* யெஷுஆ தாம் "இரண்டாம் வருகையில்" திரும்பவரவிருக்கும் ஓர் வாக்குத்தத்தத்தை சீஷர்களுக்குக் கொடுத்திருக்கிறார்: "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" *(*யோவான் *14:3).*

*3.* தேவதூதர்களால் இந்த வாக்குத்தத்தம் மறுபடியும் சொல்லப்பட்டிருக்கிறது: "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த யெஷுஆவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" - அப். *1:11*

*4.* பேதுரு அப்போஸ்தலர் சொல்கிறார்: "முன்னே குறிக்கப்பட்ட யெஷுஆ கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும், உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும்" - அப். *3:19-21.*

*5.* கிறிஸ்து ஆட்சி செய்வதற்கு மறுபடியும் வருகிறார் என்று வேதவார்த்தைகள் போதிக்கின்றன. அதாவது அவர் செய்து முடிப்பதற்கு வந்த, மிகப் பெரிய இழந்ததைத் திரும்பக் கொடுத்தலுக்கு இடையூறாக இருக்கிற சத்துருக்களையும், எல்லா விரோதிகளையும், எல்லா காரியங்களையும் பாதபடியாக்கிப் போடும்வரை அவர் ஆளுகை செய்ய வேண்டும். பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம் *(1*கொரி*. 15:25,26).* இதற்காக, ஆயிரம் வருஷங்கள் ஆளுகை செய்வார் என்றும் வேதவசனங்கள் போதிக்கின்றன.

*6.* முதல் வருகையின் விசேஷித்த வேலை மனுஷனை மீட்க வேண்டியதாக இருந்தது. இந்த இரண்டாம் வருகையின் வேலையோ மீட்கப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தி, அவர்களை ஆசீர்வதித்து விடுதலையாக்குவதாகும்.

*7.* உலகத்தார் யாவரும் கிறிஸ்தவர்களாக்கப்பட்டு ஜெயம் பெற்ற சபையால் ஆயிரவருடம் ஆளப்பட்டபின்பு கிறிஸ்து வருவார் என்று போதிக்கும் வேதவசனம் ஒன்று கூட இல்லை. வேதவசனங்கள் அப்படி போதிக்காவிட்டால் மதரீதியான விசுவாசமாக நாம் அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது. ஏனெனில் எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணக்கூடாதென்று நாம் உறுதியாக எச்சரிக்கப்பட்டிருக்கிறோம் *(1*கொரி *4:6).*

# பேர்சபை கருத்தின் பகுத்தறிவுக்கு இணக்கமில்லாதத்தன்மை

*8. பேர்சபை கருத்தின்படி, நம்முடைய கர்த்தர் மனுஷர்களின் மாம்ச கண்களால் பார்க்கக்கூடிய விதத்தில், ஒரு மேகத்தின் மேல் வருவதையும், எக்காளம் ஊதிக்கொண்டு, ஒரு பளபளப்பான ஒளியுடன் பிரகாசித்துக் கொண்டும் மேலும், இந்த பிரபஞ்சத்தை மிகச்சிறிய துகள்களாக வெடிக்கச் செய்துகொண்டும் சொல்லர்த்தமான விதத்தில் வரவேண்டியதாக இருக்கிறது.*

*9. சாதாரணமாக அவரது வருகையின் விதத்தைப் பற்றிய இந்தக் கருத்து மனிதர்களை பயத்தின் மூலமாக மனம் திரும்பச் செய்வதற்காக பயன்படுத்தப்படுகிறது; ஆனால் இதை வேதாகமம், பகுத்தறிவு மற்றும் உண்மையான சம்பவங்களின் வெளிச்சத்தில் நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால், பலவிதத்தில் முரண்பாடாய் இருக்கிறதாகக் காணப்படுகிறது.*

*10. இந்தக்கருத்துக்கு வேதாகம அடிப்படை இல்லை; ஏனெனில் இது உவமைகள், அடையாளங்கள் மற்றும் மறைக்கப்பட்ட இரகசியங்களைப் போன்று உருவகமான வசனங்களின் சொல்லர்த்தமான வியாக்கியானத்திலிருந்து எடுக்கப்படுகிறது.*

*11. இந்தக்கருத்து தவறான வியாக்கியானத்தின்மேல் நிற்பதுமட்டுமல்லாமல், பகுத்தறிவுக்குக்கூட முரண்பட்டிருக்கிறது. ஆராய்ந்து பார்த்தோமானால் இந்த கருத்தின் மூடத்தனம் தெளிவாகும்.*

*12. ஒரு உதாரணத்திற்கு, பூமியின் உருண்டைத் தன்மையின் காரணமாக அவர் வரும் இடத்திற்கு எதிர்புறத்தில் (antipode) உள்ள மக்கள் அவர் வருவதை எப்படிக் காணக்கூடும்? அவர் வந்தபிறகு, பூமியைச் சுற்றி கிழக்கிலும் மேற்கிலும் அவரை காணுமாறு செய்வதற்கு பூமி தன் அச்சை சுற்றிவரும் 24 மணிநேரத்திற்கு, ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிற்பாரென்று சிலர் கூறலாம். அப்படியிருந்தாலும் பூமியின் உருண்டை தன்மை, வடக்கிலும் தெற்கிலும் சில நூறுமைல்களுக்கு அப்பால் அவரைக் காணமுடியாததாகச் செய்யும். பூமியின் வாயு மண்டலத்திற்குள் உருவாகிக் கொண்டிருக்கிற மேகங்களும், பூமியின் உருண்டை தன்மையும் அவரை ஒரு குறைந்த தூரத்தில் கூட காணமுடியாததாகச் செய்யும்.*

*13. எடுத்துக்காட்டாக, பூமி முழுவதும் கேட்கக்கூடியதாக மிகுந்த சத்தத்தை உண்டாக்கக்கூடிய ஒரு சொல்லர்த்தமான எக்காளம், அதைச் சுற்றி 12,000 மைல்களுக்குள் இருக்கிற எல்லோருடைய காது ஜவ்வுகளையும் கிழித்துவிடும். தமஸ்குவிற்கு செல்லும் வழியில் சவுலுக்கு ஆனது போல கிறிஸ்துவின் மகிமையான சரீரத்தின் ஒளி மனுஷரின் மாம்ச கண்களுக்கு வெளிப்படுமானால், அவர்கள் உடனடியாக குருடராவார்கள். ஆனால் அந்த சரீரத்தையே பார்ப்பார்களெனில் அவர்கள் அந்நேரமே மரித்துவிடுவார்கள். ஏனெனில் எவரும் அவரைக்கண்டு உயிரோடு இருக்கக்கூடாது. (யாத். 33:20; எபி.1:3;1தீமோ. 6:16)*

*14. மேலும் அவருடைய சமூகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போவதைக் குறித்துச் சொல்லும் வசனங்களில் சொல்லர்த்தமான பிரபஞ்சம் குறிக்கப்பட்டிருந்தால், அது வெகுகாலத்திற்கு முன்பே அகன்று போயிருக்க வேண்டும். ஆனால் அவைகள் எல்லாம் சிருஷ்டிக்கப்பட்டது முதல் அவர் சமூகத்தில் இருக்கின்றன. (வெளி. 20:11)*

*15. இவ்விதமாக வேதாகமத்தை வியாக்கியானம் பண்ணுகிற சரியான முறைகளும், பகுத்தறிவு மற்றும் உண்மைச் சம்பவங்களும், நமது கர்த்தராகிய யெஷுஆ, அவரின் இரண்டாம் வருகையில் காணக்கூடிய விதத்தில் வெளிப்படுவார் என்ற கருத்தை நிராகரிக்கிறது.*

*16. நம்முடைய கர்த்தரின் இரண்டாம் வருகையை மனுஷரின் மாம்ச கண்களால் காணமுடியாது. ஆனால், அவர்களின் மனக்கண்களால் அதாவது புரிந்து கொள்ளுதலின் கண்களால் காணமுடியும் என்ற உண்மையை ஒரு நேர்மையான, பக்தியான மற்றும் கவனமான வேதாகம ஆய்வு வெளிப்படுத்துகிறது.*

*நாம் இப்பொழுது இந்தக்குறிப்பை நிரூபிக்கின்ற கூடுதலான வேதாகமச் சான்றுகளைக் கொடுக்கிறோம்.*

## வேதாகமத்தின் நேரடியான அறிக்கைகள்

*17. யெஷுஆவை மனுஷர்கள் இனி காணமுடியாது என்று வேதாகமம் நேரடியாகவே போதிக்கிறது. “இன்னும் கொஞ்சங்காலத்திலே உலகம் என்னைக் காணாது” (யோவான் 14:19), நம்முடைய கர்த்தரின் இந்த அறிக்கை தெளிவான குறிப்பாக இருக்கிறது. இது சம்பந்தமாக 1யோ. 3:2-ல் கர்த்தருடைய சபை அவருடன் மறுரூபமாகும்பொழுது அவரை தரிசிப்பார்கள் என்று குறிப்பிடும்போது, யோவான் 14:19 மனுகுலத்தில் மற்றெவரும் காணமாட்டார்கள் என்று தெளிவாகப் போதிக்கிறது.*

*18. உண்மையாகவே யெஷுஆ இங்கு தமது மகிமையான உயிர்த்தெழுதலின் சரீரத்தில் மனுகுலத்துக்கு என்றுமே காணமுடியாதவராய் இருப்பார் என்று தன்னைக் குறித்துக் கூறியிருக்கிறார்; பரிசுத்த பவுல் தேவனுடன் யெஷுஆ மகிமையில் வாசம் செய்கிறதைப்பற்றி கூறும்பொழுது அவர் உபயோகித்த வார்த்தைகள் இதை தெளிவாகக் காண்பிக்கின்றன. “ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறார்” (அவருடைய மகிமை அடைந்த நிலையில்) (1தீமோ. 6:16).*

*19. நம்முடைய கர்த்தர் அவர் மகிமையடைந்ததிலிருந்து மனுஷரின் மாம்ச கண்களுக்கு காணக்கூடாதவராயிருக்கிறார். மேலும், என்றென்றைக்கும் இருப்பார் என்று இந்த வசனங்கள் மிகத்தெளிவாகக் காண்பிக்கின்றன.*

*ஆகையால் அவருடைய இரண்டாம் வருகையில், அவர், மனுஷர்களின் மாம்ச கண்களால் காணக் கூடாதவராய் இருப்பார்.*

## “இரவிலே திருடன் வருகிறவிதமாய்”

*20. நமது கர்த்தருடைய வருகையின் விதம், ஒரு திருடனின் வருகையைப்போல் இருக்கும் என்று போதிக்கிற வேதாகம வசனங்கள், மேலே சொல்லப்பட்ட கருத்தைக் (மனுஷர்களின் மாம்ச கண்களால் காணமுடியாது) குறிப்பாக உணர்த்துகிறது (1தெச. 5:1-6; 2பேதுரு 3:10, வெளி. 16:15).*

*21. ஒரு திருடன் ஒரு வீட்டை கொள்ளையிட வரும்பொழுது அவன் ஒரு பிரகாசமான விளக்கை எடுத்துக்கொண்டும், மற்றும் எக்காளத்தை ஊதிக்கொண்டும், ஆரவாரத்தோடு மக்களிடம் ‘‘மனிதர்களே விழித்துக் கொள்ளுங்கள், நான் உங்கள் வீடுகளை கொள்ளையிடப்போகிறேன்’’ என்று கூறிக்கொண்டு வருவானா? நிச்சயமாகவே, அவன் இவைகளை செய்யமாட்டான் என்று நாம் அறிகிறோம். ஆகையால், நம்முடைய கர்த்தரும் இரவில் திருடனைப்போல் வரும்பொழுது இப்படிச் செய்யமாட்டார் என அறிகிறோம்.*

*22. ஆனாலும், அந்தக் குறிப்பிட்ட வீட்டில் தனக்காக காத்திருக்கும் கூட்டாளிகளுக்கு, திருடன் தன் வந்திருத்தலை, சில அடையாளங்கள் மூலம் அறிவிக்க முடியும். அதே விதமாகக் கர்த்தர் அவருடைய வந்திருத்தலுக்குப் பின்பு, உண்மைத்துவமுள்ளவர்களாக விழித்திருக்கும் பரிசுத்தவான்களுக்கு, சில அடையாளங்கள் மற்றும் சாட்சிகள் மூலமாக அவருடைய வந்திருத்தலின் உண்மையைத் தெரிவிக்க வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். (மத். 24:3,30-33)*

*23. 1தெச. 5:1-6-ல் கர்த்தருடைய வருகை, திருடன் வருகிறவிதமாக இருப்பதின் காரணமாக, உலகம் அதை அறியாமலிருக்குமென்றும் ஆனாலும், விழித்துக் காத்திருக்கிற அவருடைய ஜனங்கள் அதை அறிவார்கள் என்றும் அப்போஸ்தலர் சொல்லுவதைக் கவனியுங்கள். உண்மையாகவே, உலகம் அவருடைய வந்திருத்தலை மாம்சகண்களால் பார்க்கக்கூடும் என்றால், அவர்கள் அதை அறிந்திருக்கவேண்டும். ஆகையால், அவர்கள் அதை அறியாமலிருப்பது, அவரின் இரண்டாம் வருகையை அவர்கள் காணமுடியாது என்பதை நிரூபிக்கிறது. ஆகையால், அவரின் இரண்டாம் வருகை மாம்சகண்களால் பார்க்க முடியாத ஒன்றாய் இருக்க வேண்டும்.*

## “நோவாவின் காலத்தில் நடந்தது போல்”

*24. மனுகுலம் யெஷுஆவின் இரண்டாம் வருகையில் அவரைக் காணாது என்ற உண்மைக்கு மத். 24:37-39 வசனங்களில் யெஷுஆ ஒரு திடமான சாட்சி கொடுக்கிறார். ‘‘நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வந்திருத்தலிலும் நடக்கும். எப்படியெனில் ஜலப்பிரளயத்துக்கு*

*முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும் ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும் ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள். அப்படியே மனுஷகுமாரன் வந்திருத்தலிலும் [parousia - presence] நடக்கும்". (Revised Version - திருத்தப்பட்ட மொழியாக்கம்)*

*25. நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரனுடைய பரூஷியா (parousia -வந்திருத்தல்) காலத்திலும் நடக்கும் என்று அவர் கூறுகிறார்.இங்கு ஒப்பிட்டு பார்க்கக்கூடிய விஷயம் மிகவும் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது, நோவாவின் குடும்பத்தைத் தவிர மற்ற மனுஷர்கள் வரக்கூடிய ஜலப்பிரளயத்தை அறியாதவர்களாகவும், நோவாவும் அவனுடைய குடும்பமும் கொடுத்த சாட்சிகளை நம்பாமலும் இருந்ததால் அவர்கள் ஒன்றும் அறியாதிருந்தனர். இக்காரியத்தைக் குறித்தே நம் கர்த்தர் ஒப்பிட்டுக் கூறினார்.*

*26. இந்த நிலைமைகளைப் பற்றிய லூக்காவின் அறிக்கை (லூக்கா 17:26-29) அதே வார்த்தைகளில் இல்லாவிட்டாலும் அதற்கு மிகவும் இசைவாயிருக்கிறது. பரூஷியா[parousia] என்ற கிரேக்க வார்த்தையை லூக்கா பயன்படுத்தாவிட்டாலும், அதே எண்ணத்தை தெரிவிக்கிறார். "நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்" - அவருடைய வந்திருத்தலின் நாட்களிலும் - அவருடைய நாட்களுக்கு முன்போ அல்லது பின்போ அல்ல, அவருடைய வந்திருக்கும் நாட்களில், உலகமானது புசித்தல், குடித்தல், கொள்ளுதல், வாங்குதல், விற்றல், நடுதல் மற்றும் கட்டுதல் ஆகிய காரியங்களில் ஈடுபட்டிருக்கும்.*

*27. ஜலப்பிரளயத்திற்கு முன்பு இருந்த மனுஷர்களும் மகா உபத்திரவத்திற்கு முன்பு யெஷுஆவினுடைய இரண்டாம் வந்திருத்தலின்போது இருந்த மனுஷர்களும் தங்கள் செயல்களிலும் மற்றும் வரப்போகிற உபத்திரவத்தைப் பற்றிய அறியாமையிலும் ஒரே விதமாக இருப்பார்கள்.*

*28. ஜலப்பிரளயத்திற்கு முன்பு இருந்த நோவாவின் நாட்களில் மனுஷர்கள் சமூக வாழ்க்கையின் சாதாரண செயல்களில் ஈடுபட்டிருந்தார்கள். வரப்போகிற ஜலப்பிரளயத்தைப் பற்றிய போதனையில் நம்பிக்கையின்மையின் காரணமாக அது சமீபித்திருப்பதைப்பற்றி அறியாமலிருந்தார்கள். அது போலவே மகா உபத்திரவம் பூமியில் திடீரென்று நிகழ்வதற்கு முன்பு கிறிஸ்துவின் இரண்டாம் வந்திருத்தலின் நாட்களில் மனுஷர்கள் சமூக வாழ்க்கையில் சாதாரண செயல்களில் ஈடுபட்டிருப்பார்கள். வரப்போகிற உபத்திரவம் மற்றும் அதன் காரணமாக கிறிஸ்துவின் இரண்டாம் வந்திருந்தலின் சாட்சியை நம்பாததினால் அவர்கள் வரப்போகும் உபத்திரவத்தைப் பற்றி முற்றிலும் அறியாமலிருப்பார்கள்.*

*29. யெஷுஆ வந்திருந்தும் மனுஷர்கள் பொதுவாக இந்த உண்மையைப் பற்றியும் உபத்திரவகாலம் வருவதைப்பற்றியும் எவ்வாறு அறியாதிருக்கக்கூடும் என்று கேட்கிறோம்? அவர்கள் அவரைப் பார்க்கக் கூடுமானால் அவர் வந்திருப்பதை அறிந்து உபத்திரவகாலம் வருவதை எதிர்பார்த்திருப்பார்களே. யெஷுஆ வந்திருப்பதை அவர்கள் அறியாதிருப்பார்கள் என்ற உண்மை அவர்களுடைய மாம்சகண்களுக்கு கட்டாயமாக அவர் மறைந்திருப்பார் என்று அர்த்தப்படுத்துகிறது. ஆகையால் அவரின் இரண்டாம் வருகை மாம்சகண்களுக்கு காணக் கூடாததாயிருக்கவேண்டும்.*

## “மின்னல் கிழக்கிலிருந்து தோன்றுவதுபோல்”

*30. நம்முடைய கர்த்தராகிய யெஷுஆ அவருடைய வருகையின் விதமானது எப்படி வெளிப்படுத்தப்படும் என்பதற்கு ஒரு அழகான உதாரணத்தை மத்.24:27-ல் நமக்குத் தந்திருக்கிறார். அதாவது பிரகாசமான ஒளி கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல மனுஷகுமாரனுடைய வந்திருத்தலிலும் இருக்கும் என்று கூறினார்.*

*31. இந்த வசனத்தில் சூரிய ஒளி,[ கிரேக்க வார்த்தை “அஸ்ட்ரப்பே” (astrape)- பிரகாசமான வெளிச்சம் (bright shining) ] என்று குறிப்பிடப்படவேண்டிய இடத்தில் பல மொழிபெயர்ப்புகளும் தவறாக மின்னல் என்று பயன்படுத்தியிருக்கின்றன என்பது தெளிவாக இருக்கிறது. ஏனெனில் மின்னல்வெளிச்சமானது எப்பொழுதும் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிப்பதில்லை. இது மற்ற பகுதியிலிருந்தும் கூட வரும். சூரிய வெளிச்சம் மட்டும் தான் எப்பொழுதும் கிழக்கிலிருந்து வெளிப்பட்டு மேற்கு வரை பிரகாசிக்கும். ஆகையால் நம்முடைய கர்த்தரால் கொடுக்கப்பட்ட உதாரணத்தில் சூரிய வெளிச்சம் என்பது மட்டுமே கர்த்தரின் வார்த்தைக்கு இசைவாயிருக்கிறது.*

*32. மற்றும் ஒரு உதாரணம் நம்முடைய கர்த்தரால் அஸ்ட்ரப்பே (astrape) என்ற வார்த்தை லூக்கா. 11:36-ல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் இது விளக்கின் வெளிச்சம் என்ற அர்த்தத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. பொதுவான மொழிபெயர்ப்பில் [KJV] பிரகாசமான வெளிச்சம் [bright shining] என்று சொல்லப்பட்டுள்ளது.*

*33. கர்த்தருடைய பிரசன்ன நாளில் விடியற்கால வெளிச்சத்தைப் போன்று படிப்படியாக வெளியாகிற சத்தியத்தையும் ஆசீர்வாதத்தையும் சூரிய உதயமானது எவ்வளவு அழகாக விளக்குவதாக இருக்கிறது! சூரியன் அது கொடுக்கும் இயற்கையான வெளிச்சத்தினால் தன்னுடைய பிரசன்னத்தை வெளிப்படுத்துவதுபோல உருவகமான வெளிச்சமாகிய சத்தியத்தினால், யெஷுஆ தம் இரண்டாம் வந்திருத்தலை வெளிப்படுத்துவேன் என்று அறிவிக்கிறார்.*

*34. அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்தில் சூரியனைப்போல் பிரகாசிப்பார்கள் (மத். 13:43) என்று கூறி, ஜெயம் கொள்ளுகிறவர்களை கர்த்தர் தம்முடனே இந்த உருவகத்தில் இணைத்துப் பேசுகிறார். மல்கியா தீர்க்கதரிசியும் இதே உருவகத்தைப் பயன்படுத்தி "உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்" என்று கூறுகிறார் (மல்.4:2). இந்த நீதியின் சூரியன் படிப்படியாக உதித்து, அதின் முழு வெளிச்சமானது இறுதியாக தீமை, அறியாமை மற்றும் பாவம் என்ற இருளை முற்றிலுமாக அழித்துப்போடும்.*

*35. ஆகையால் நம்முடைய கர்த்தரின் வந்திருத்தலை, அவர்கள் மேல் பிரகாசிக்கச் செய்யும் சத்திய வெளிச்சத்தில் (மாம்சகண்களால் அல்ல) தங்கள் புரிந்து கொள்ளுதலின் கண்களால் அறிந்து கொள்வார்கள் என்பதை மத்.24:27 சுட்டிக்காட்டுகிறது. ஆகவே அவருடைய இரண்டாம் வருகை மாம்சகண்களுக்கு காணக்கூடாததாயிருக்கும் என்பதைக் காட்டுகிறது.*

## கண்கள் யாவும் அவரைக்காணும்

*36. "இதோ, மேகங்களுடனே (மகாஉபத்திரவத்தின் இக்கட்டின் மேகம்) வருகிறார்; கண்கள் யாவும் அவரைக்காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்" (வெளி. 1:7). இந்த வசனத்தில் வரும் "மேகங்கள்" என்ற வார்த்தையை நாம் சொல்லர்த்தமாக கருதினால், நாம் மேலே காட்டியபடி அது பொருளற்றதாயிருக்கும். மற்றும் "கண்கள் யாவும்" என்பதை மனிதக் கண்களைக் குறிப்பிடுவதாக நாம் அர்த்தப்படுத்தினால் அதை 1தீமோ. 6:16க்கும் யோவா.14:19க்கும் மாறுபட்டதாக்குவோம். இந்த வசனங்கள் கர்த்தரை, இப்பொழுது இருக்கும் நிலையில், ஒரு மனுஷனும் கண்டதுமில்லை, காணவும் முடியாது (1தீமோ.6:16), மேலும் அவர் மகிமையடைந்த பிறகு, உலகம் இனி அவரைக் காணாது (யோவா.14:19) என்று போதிக்கின்றன.*

*37. தேவனின் வசனத்தின்மேலுள்ள பயபக்தி, அவ்வசனங்களை ஒன்றுக்கொன்று மாறுபடும்படி அர்த்தப்படுத்துவதிலிருந்து நம்மைத் தடுக்கவேண்டும். 1தீமோ.6:16, யோவா.14:19ம் சொல்லர்த்தமானவை என்பதும் அவை சொல்லர்த்தமான பார்வையைக் குறிக்கிறது என்பதும் தெளிவாயிருக்கிறது. ஆகையால் வெளி.1:7ல் வருகிற கண்கள் உருவகமாகவும், நமது மனக்கண்களை, அறிவின் கண்களைக் குறிக்கிறதாகவும் இருக்க வேண்டும்.*

*38. ஆதலால் இவ்வசனம் நமது கர்த்தரின் இரண்டாம் வருகையானது உபத்திரவமாகிய மேகங்களோடு வருமென்றும், யூதர்கள் உட்பட எல்லா ஜனங்களுடைய அறிவின் கண்களும் அவரைப் பற்றிய சரியான அறிவுக்கு திறக்கப்படும் என்றும் தெளிவாகப் பொருள்படுத்துகிறது.*

*39.* *இந்தக் கருத்தில்தான் "நாம் (இப்பொழுது) யெஷுவாவைக் காண்கிறோம்" என்று பரிசுத்த பவுல் எபி.2:9ல் கூறுகிறார். நமது மானிடக் கண்களால் அவரை நாம் காண்கிறோம் என்று அவர் கருதவில்லை என்பது நிச்சயம். ஆனால் நமது அறிவின் கண்களால், மனக்கண்களால் அவரைக் காண்கிறோம் என்றே கூறுகிறார்.*

*40.* *"ஒரு மனிதனும், ஒரு போதும் தேவனைக் கண்டதில்லை", எனினும் தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் அவரைக் கண்டு, அறிந்து, அவரோடு ஐக்கியம் கொண்டிருகின்றனர் (யோவா.1:18; 5:37; 14:7). நாம், தேவனுடைய அழைப்பின் சத்தத்தையும், நம்முடைய மேய்ப்பரின் சத்தத்தையும் கேட்கிறோம். நாம் தொடர்ந்து யெஷுவாவைப் பார்த்து, அவர் வாக்குத்தத்தம் பண்ணின ஜீவனாகிய பரிசைக் காண்கிறோம், நம்முடைய மாம்சகாதாலோ கண்ணாலோ அல்ல; நம்முடைய அறிவின் கண்களால் மட்டுமே காண்கிறோம்.*

*41.* *வெளிப்படுத்தின விசேஷம் என்ற புத்தகத்தின் ஆரம்ப வசனம், அது அடையாளங்கள் நிறைந்த ஒரு புத்தகம் என்பதைக் காட்டுகிறது. அங்கே ஆங்கிலத்தில் உபயோகிக்கபட்ட "signified" (**sign**-ified) என்ற வார்த்தை உருவகங்கள் மூலமாக கொடுக்கபட்டிருக்கிறதை அர்த்தப்படுத்துகிறது. ஆகவே வெளி.1:7ல் வருகிற "மேகங்கள்", "கண்", "பார்த்தல்" என்பவை அடையாளங்களாக இருக்கவேண்டும்.*

## எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார்

*42.* *நம்முடைய கர்த்தரின் வருகையின் விதத்தைப் பற்றி மிகத் தவறாகப் பயன்படுத்தப்பட்ட வேதவசனம் அப்.1:11 ஆகும். "உங்களிடத்தின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த யெஷுவாவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார்".இந்த வசனம் வழக்கமாக "அவர் வானத்துக்கு எழுந்தருளிப் போனதை நீங்கள் பார்த்ததுபோல அவர் திரும்ப வருவதையும் பார்ப்பீர்கள்" என்று கூறுவது போல் விளக்கம் கொடுக்கப்படுகிறது. ஆனால் இவ்வசனம் அவர் வருகிறதைக் காண்பதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை.*

*43.* *தெளிவாக இவ்வசனத்தில் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய கருத்து அவர் போன விதமும் அவர் திரும்பவரும் விதமுமேயாகும். அவர் போனதைப் பார்த்ததுபோல அவர் திரும்பவருவதைப் பார்ப்பதல்ல, "உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த யெஷுவாவானவர் **எப்படி** உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, **அப்படியே [in like manner]** மறுபடியும் வருவார்". ஆகையால் இவ்வசனம் நமது கர்த்தர் திரும்பி வரும் **விதத்தைப்** [manner] பற்றிக்கூறுகிறது.*

*44. அவர் போனவிதத்திலிருந்து அவர் வரும் விதத்தைப் பற்றிய சில விஷயங்களை நாம் அறியலாம்.*

*I. உலகத்தார் சம்மந்தப்பட்டவரை அவர் ரகசியமாகப்போனார். அவருடைய சீஷர்கள்தவிர வேறொருவரும் அந்நேரத்தில் அதை அறியவில்லை. அப்படியே உலகத்தார் சம்மந்தப்பட்ட அளவில் அவர் ரகசியமாக வருவார் (இரவில் திருடன் வருகிற விதமாய்). அதன் முதல் கட்டத்தில் அவருக்கு உண்மைத்துவமாக இருப்பவர்கள் தவிர வேறு ஒருவரும் அறியமாட்டார்கள்.*

*II. ஆடம்பரமின்றி, எக்காளத் தொனியால் உலகத்தை திடுக்கிடச் செய்யாமலும், மேகத்தில் ஏறாமலும், கண்களைக் கூசச்செய்யும் வெளிச்சமில்லாமலும் உலகத்தை நொறுக்கிப்போடாமலும், அவர் அமைதியாகப்போனார். ஆகையால் அவருடைய இரண்டாம் வருகையும் ஆடம்பரமின்றி, எக்காளத் தொனியால் உலகத்தைத் திடுக்கிடச் செய்யாமல், மேகத்தில் ஏறாமல், கண்களைக் கூசச்செய்யும் வெளிச்சமில்லாமல், உலகத்தைத் தூளாக்காமல் அமைதியானதாக இருக்கும்.*

*III. தாம் விட்டுப்போகிறவர்களை ஆசீர்வதித்துக்கொண்டே சென்றார். ஆகையால் அவர் திரும்ப வரும்போது முதலாவது தமக்குக் காத்திருக்கும் சபையையும், பின் உலகத்தாரையும் ஆசீர்வதித்துக்கொண்டே வருவார்.*

*இந்த வசனம் அவர் திரும்பவரும் விதம், அவர்போன விதமாகவே இருக்கும் என்பதை நிரூபிக்கிறது.*

## பரிசுத்த பவுலின் பகுத்தறிவுக்கு இணக்கமான வாதம்

*45. பரிசுத்த பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் நிருபத்திலிருந்து, அவர்கள் கர்த்தரின் இரண்டாம் வருகை வந்துவிட்டதென்று தவறாக தீர்மானித்திருந்தார்கள். ஆகையால் அவர்களின் தவறான எண்ணத்தைத் திருத்துவதற்காக அப்போஸ்தலர் தனது இரண்டாவது நிருபத்தை எழுதினார்.*

*46. விஷயத்தை சரியாக புரிந்து கொண்டோமானால், 2தெச..2:1-9ல் பரிசுத்த பவுலின் வாதம் திட்டமாகவும் தெளிவாகவும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஆரம்பிக்கவில்லையென்று நிரூபிப்பதை அறியலாம். ஆனாலும் அவருடைய வருகை மாம்சகண்களால் காணக்கூடியதாக இருக்குமேயானால், இந்த வாதம் நிச்சயமாக திறனற்றதும் நேரடியாக இல்லாததுமாக இருக்கும்.*

*47. நமது கர்த்தரின் இரண்டாம் வருகை சொல்லர்த்தமான எக்காள தொனியோடும், மேகத்தின்மேல் ஏறிக்கொண்டும், கண்களைக் கூசச் செய்யும் பிரகாசத்துடன், பூமியைத் தூளாக்கிக் கொண்டும் வருவதாக இருக்கும் என்பதாக பரிசுத்த பவுல் அவர்களுக்குப் போதித்திருந்தால், நியாயமும் நேர்மையுமுள்ள இந்த அப்போஸ்தலர், தெசலோனிக்கேயரின் இந்தத் தவறை கீழ்க்கண்டவாறு*

*மறுத்திருக்கலாம் என நாம் கற்பனை செய்துக்கொள்ளலாம். ''எனது அன்புள்ள சகோதரரே நமது கர்த்தர் தமது இரண்டாம் வருகையில், தமது மாம்ச சரீரத்தில் கண்களைக் கூசச் செய்யும் பிரகாசமான வெளிச்சத்துடன் உலகெங்கும் கேட்கும்படி எக்காளத்தை ஊதிக்கொண்டும், மேகத்தின் மேல் ஏறிக்கொண்டும், பூமியை துகள்களாக அழித்துக்கொண்டும் வருவார் என்று நான் போதித்ததை இவ்வளவு சீக்கிரமாக மறந்து விட்டீர்களே என்று கவலைப்படுகிறேன். இவைகளை நீங்கள் மறக்காதிருந்தால் அவர் இப்போது வந்திருக்கிறார் என்பதை நம்பமாட்டீர்கள். அவர் இன்னும் வரவில்லை என்பதை நிரூபிக்க உங்களிடம் சில விஷயங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவருடைய பிரகாசமான சரீரத்தையும், அவர் ஏறிவந்தமேகத்தையம், எனக்குக் காட்டும்படி கேட்டுக்கொள்கிறேன். உலகெங்கும் கேட்கும்படி அவருடைய சொல்லர்த்தமான எக்காளத்தை எப்போது ஊதினார். நானும் கர்த்தருக்குள் என்னுடன் பிணைக்கப்பட்டவர்களும் அவ்வித எக்காள தொனியைக் கேட்கவில்லை. உலகமானது ஆதியில் இருந்ததுபோல் இன்னமும் இருக்கிறதென்பதற்கு நீங்களே சாட்சிகளாயிருக்கும் போது, அது தூளாக நொறுக்கப்பட்டு விட்டதென்பதை நீங்கள் எப்படி நம்பலாம். இவைகளெல்லாம் நடைபெறாதிருப்பதை நீங்கள் பார்க்கும்போது கர்த்தராகிய யெஷுஆவானவர் இன்னும் வரவில்லை என்று உடனே அறிய வேண்டாமா? ஓ! மறதியுள்ள தெசலோனிக்கேயரே கர்த்தருடைய நாள் வந்துவிட்டதென்று ஒருவனும் எவ்விதத்திலும் உங்களை ஏமாற்ற இடம் கொடாதிருங்கள். ஏனெனில் நமது கர்த்தர் பிரகாசமான தமது மாம்ச சரீரத்தில் சொல்லர்த்தமான மேகத்தில் ஏறிக்கொண்டு, சொல்லர்த்தமான எக்காள தொனியோடு, பிரபஞ்சத்தை தூளாக நொறுக்கினாலொழிய அந்த நாள் வராது. இவைகளைப் பற்றிய உங்கள் ஞாபகங்களைப் புதுப்பித்து கர்த்தர் வந்துவிட்டார் என்ற ஏமாற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்ளுங்கள்'', என்று சொல்லியிருப்பார்.*

*48. அவருடைய வேண்டுகோள் அவர்களின் பார்வைத்திறனைப் பற்றியதாயிராமல் இரண்டாம் வருகைக்குமுன் நடக்கவேண்டிய சில முன்னறிவிக்கப்பட்ட ஆனால் நிறைவேறாதிருக்கிறதுமான அடையாளங்களைப் பற்றியதாக இருந்தது. ஏனெனில், உண்மையான விசுவாசத்திலும், கிறிஸ்தவமத அப்பியாசத்திலுமிருந்து விழுவதின் மூலம் அந்திகிறிஸ்து, பாப்பு மார்க்கத்தில் மிகுந்த வல்லமையடைந்து, தனது பயங்கர ஆட்சியைப் பூர்த்தி செய்து, அதன் பொய்யான போதகங்களினாலும் வல்லமையினாலும் வெளிப்படுத்தப்பட்டு அழிக்கப்பட்டாலொழிய இரண்டாம் வருகை வராதென்று அவர் தெசலோனிக்கேயருக்குச் சொல்லியிருக்கிறார். அதன் பிறகு கிறிஸ்து திரும்பவந்து அந்திக்கிறிஸ்துவை நிர்மூலமாக்குவார் (2தெச.2:3-9).*

*49. ஆகையால் பரிசுத்த பவுலின் வாதம் அதன் இயல்பிலும், உபயோகத்திலும் தெசலோனிக்கேயருக்குப் போதித்ததுபோல் நமது கர்த்தரின் வருகை கண்ணுக்குத் தெரியாததாயிருக்கும் என்பதை பொருள்படுத்துகிறது.*

## யெஷுஆ இப்பொழுது ஆவி ஜீவியாக இருக்கிறார்

*50. முதலாவது, யெஷுஆ இப்பொழுது ஆவி ஜீவியாக இருக்கிறார் என்று தேவன் நேரடியாகக் கூறுகிறார். மற்ற இடங்களில் கூறப்பட்டிருப்பதுடன் 1கொரி.15:45லும் இது சொல்லப்பட்டிருக்கிறது."முந்தின மனிதனாகிய ஆதாம் (ஆதி.2:7) ஜீவாத்துமாவானான் (மானிட சரீரமுள்ள மனிதன்) பிந்தின (இரண்டாவதான யெஷுஆ வச.47) ஆதாம் உயிர்ப்பிக்கிற (ஜீவனைக் கொடுக்கிற) ஆவியானார்" என்று கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் ஏதேன் தோட்டத்திலிருந்த ஆதாம் ஒரு மானிட ஜீவியானதுபோல், பரலோகத்திலிருக்கும் ஆதாம் (யெஷுஆ தமது உயிர்த்தெழுதலில்) ஒரு ஆவி ஜீவியானார்.*

*51. வசனம் 46ல் பரிசுத்த பவுல் ஏதேன் தோட்டத்திலிருந்த ஆதாம் ஆவி ஜீவி அல்ல, ஒரு மானிட ஜீவி என்று அழுத்தமாகக் கூறுகிறார். பிந்தின ஆதாமாகிய நமது கர்த்தர் ஆவி ஜீவியாக இருக்கிறார் என்றும் கூறுகிறார்.*

*52. வசனம் 47ல் முதலாம் ஆதாம் "மண்ணானவன்" அதாவது தொட்டு உணரக்கூடிய பொருள்களிலிருந்து செய்யப்பட்ட சரீரம் உடையவனாக இருந்தான் என்றும், நமது கர்த்தராகிய இரண்டாம் ஆதாம் "வானத்திலிருந்து" அதாவது ஆவிக்குரிய பொருள்களால் செய்யப்பட்ட சரீரம் உடையவராக இருந்தார் என்றும் குறிப்பிடுவதின் மூலம் பரிசுத்த பவுல் இதை நிரூபிக்கிறார். கிரேக்க மொழியில் 47ம் வசனத்தில் "of the earth" (பூமியிலிருந்து) என்ற சொல்லின் "of the" என்று மொழிபெயர்க்கபட்ட கிரேக்க வார்த்தை மற்றும் "from heaven" (வானத்திலிருந்து) என்ற சொல்லின் "from" என்று மொழிபெயர்க்கபட்ட கிரேக்க வார்த்தை - இரண்டும் ஒரே கிரேக்க வார்த்தையாய் இருக்கிறது. எந்த பொருளால் உடல் உருவாக்கப்பட்டது என்பதை இரண்டுமே காட்டுகிறது.*

*53. இந்த மூன்று வசனங்களும் (1 கொரி.15:45-47), இரு ஆதாமுக்குமிடையே, அவர்களின் சரீரங்கள் உருவாக்கப்பட்ட பொருள்களில் உள்ள வித்தியாசத்தை குறிப்பிடுகிறதின் மூலம், நமது கர்த்தர் மரணத்திலிருந்து, ஆவி ஜீவியாக ஆவிக்குரிய சரீரத்தோடு உயிர்த்தெழுந்தாரென்று நிரூபிக்கின்றன - மானிட சரீரத்தோடு மனிதனாக அல்ல.*

*54. மேலும் நமது கர்த்தராகிய யெஷுஆ 2கொரி.3:17ல் ஆவியென்று நேரடியாக அழைக்கப்படுகிறார், "கர்த்தரே ஆவியானவர்".*

*55. 2கொரி. 5:16ல் பரிசுத்த பவுல் "கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும் இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்" என்று சொல்லுகிறார். நமது கர்த்தரின் மரணத்துக்கு முன் அவரை மனிதனாக அறிந்திருந்தாலும் பிறகு ஒருபோதும் கிறிஸ்துவை அவர் "மாம்சத்தின்படி" மனிதனாக அறியவில்லை. பரிசுத்த பவுல் இதை சொல்லுவதற்குமுன் யெஷுஆ மானிட ஜீவியாக இருந்தாலும், அவர் இப்போது மானிட ஜீவியாக இல்லை*

*என்று, இந்த வசனம் பொருள்படுத்துகிறது. இம்மாற்றத்துக்குக் காரணம் நமது கர்த்தர் உயிரோடெழுப்பப்பட்டபோது அவர் மரணத்திலிருந்து ஒரு மாம்சஜீவியாக இல்லாமல் ஆவி ஜீவியாக எழுப்பப்பட்டார் என்பதுதான்.*

*56. 1பேது. 3:18 இதற்கு ஒரு வலிமையான குறிப்பாகும். யெஷுஆவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் பற்றி "மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (மாம்சத்தில் உயிர்ப்பிக்கப்படவில்லை என்பதைக் கவனிக்கவும்) என்று கூறுகிறார். அவர் எதில் கொலையுண்டார், எதில் உயிர்ப்பிக்கப்பட்டார் என்பதில் கொடுக்கப்பட்டுள்ள வேறுபாட்டை வாசகர்கள் கவனிக்கவும். நமது கர்த்தர் ஆவி ஜீவியாக அல்ல மனுஷனாக உயிர்த்தெழுந்தார் என்று போதிக்கும் தற்கால வேதசாஸ்திரத்தின்படி, இந்த வசனம் மாம்சத்தில் கொலையுண்டு மாம்சத்தில் உயிர்ப்பிக்கப்பட்டார் என்றிருக்க வேண்டும். ஆனால் பொய் உரையாத தேவன் அதற்கு நேர் எதிரிடையாகக் கூறுகிறார். அதாவது "மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்".*

*57. நம்முடைய கர்த்தர், ஆவி ஜீவியாக இருப்பதால் நமது மானிட கண்களுக்கு கண்டிப்பாக காணக்கூடாதவராய் இருக்க வேண்டும். ஆகையால் அவருடைய இரண்டாம் வருகை கண்ணுக்குத் தெரியாத முறையில் இருக்க வேண்டும்.*

## யெஷுஆ சீஷர்களுக்கு அளித்த தோற்றங்கள் சம்பந்தப்பட்ட உண்மைகள்

*58. யெஷுஆ ஒரு மனிதனாக அல்ல, ஒரு ஆவி ஜீவியாக உயிர்த்தெழுந்தார் என்பதற்குரிய சாட்சியின் இறுதியான குறிப்பாக, நாம் அவர் உயிர்த்தெழுதலுக்குப் பின், அவர் வெவ்வேறான சரீரங்களில், பலவிதமான தோற்றங்களுடன், தமது சீஷர்களுக்குக் காணப்பட்ட உண்மைகளை எடுத்துக் கூறுவோம்.*

*59. சீஷர்கள் தேவனுடைய வசனங்களுக்கு இணக்கமாக, மரித்தோர் மரித்தவர்களாகவே இருப்பதால் ஒன்றையும் அறியமுடியாது, செய்யமுடியாது என்று நம்பியிருந்தார்கள். ஆகையால் தான் மீண்டும் உயிருடனிருப்பதை சீஷர்களுக்கு நிரூபிப்பதற்கு யெஷுஆ சில காரியங்களைச் செய்து, பல விஷயங்களைப் பற்றி அவர் அறிந்திருந்தார் என்று காண்பிக்கவும் வேண்டியதாயிருந்தது. ஆகையால் தாம் உயிரோடிருப்பதாக சாதாரணமாக அவர் கூறியதும், அவர்களுக்குக் காணப்பட்டபோது சில காரியங்களைச் செய்ததும் அவர் உயிருடனிருக்கிறார் என்பதற்கு அவர்களுக்குப் போதுமான அத்தாட்சியாயிருந்தது.*

*60. மேலும் யெஷுஆ தாம் மானிடத் தன்மையிலிருந்து ஆவி தன்மைக்கு மாற்றப்பட்டதை அவர்கள் நம்பும்படி பலவிதமான சரீரங்களில் அவர்களுக்குத் தோன்றினார். அதிலிருந்து அவர்கள் படிப்படியாகத் தங்களுக்கு அவர்*

காட்சியளித்த சரீரங்களில் ஒன்றும் அவருடைய உயிர்த்தெழுந்த சரீரமல்ல என்ற முடிவுக்கு வந்தார்கள். அது ஆவியின் சரீரம் என்பதையும், அதை மனித கண்களால் காணமுடியாதென்பதையும் படிப்படியாக அறிந்து கொண்டார்கள். இவ்வாறு தாம் உயிருடனிருப்பதை விரைவில் அவர்கள் நம்பும்படிச் செய்தார். இனி மானிட ஜீவியாக அல்ல, தெய்வீகத் தன்மையில் இருப்பதை படிப்படியாக அவர்கள் நம்பும்படிச் செய்தார்.

61. விசுவாசத்திற்கு எதிரான தடைகளை நம்முடைய கர்த்தர் நீக்கிய போதிலும் அவர்களுடைய சரீர பார்வைத்திறன் மற்றும் தொட்டு உணர்தல் மூலம் அல்லாமல், வேதாகம அடிப்படையில் அவர்களோடு விவேகமான வாதம் செய்வதின் மூலம், நம்முடைய கர்த்தர் சீஷர்களை நம்பிக்கைக் கொள்ளச்செய்து, அவர்களை மற்றவர்களுக்கு சாட்சிகளாக ஏற்படுத்தினார். "அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களைநோக்கி எழுதியிருக்கிறபடி கிறிஸ்துபாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்" (லூக்கா 24:45-48). பேதுருவும் இந்த நோக்கத்தையே பின்வருமாறு தெளிவாகச் சொல்கிறார். "மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பி பிரத்தியட்சமாய்க் காணும்படிச் செய்தார்". "ஆயினும் **எல்லா ஜனங்களுக்கும் பிரத்தியட்சமாகும்படிச் செய்யாமல்,** அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு அவரோடே புசித்துக் குடித்தவர்களும் தேவனால் முன்பு நியமிக்கப்பட்ட சாட்சிகளுமாகிய எங்களுக்கே பிரத்தியட்சமாகும்படிச் செய்தார். அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும் சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார்" (அப்.10:40-42).

62. நமது கர்த்தரின் உயிர்த்தெழுதலுக்குப் பின் அவர் அளித்த ஒரு காட்சி, நமது கவனத்தை ஈர்க்கத்தக்கதாய் வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அதுவே தர்சு பட்டணத்தானாகிய சவுலுக்கு, தமஸ்குவுக்கு போகும் வழியில் அளித்த காட்சியாகும். பார்த்தவுடன் மரணத்தை உண்டாக்கக்கூடிய (1தீமோ. 6:16; எபி. 1:3; யாத். 33:20) நமது கர்த்தரின் மகிமையடைந்த சரீரத்தை பரிசுத்த பவுல் பார்க்கவில்லை. ஆனாலும் அந்த சரீரத்தின் ஒரு பிரதிபலிப்பைப் பார்த்ததின் காரணமாக அவர் தாம் கர்த்தரை பார்த்ததாகக் கூற முடிந்தது. கிறிஸ்துவுடைய சரீரத்தில் இயற்கையாய் அமைந்திருந்து அதிலிருந்து பிரகாசித்ததுமான ஒளியை அவர் பார்த்தார். ஆனால் அவ்வொளி எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருந்ததென்றால், அவருடைய கண்கள் அவ்வொளியை ஊடுருவி, சரீரத்தைப் பார்ப்பதற்கு முன்பே, அவ்வொளியின் பிரகாசத்தினால் அவருடைய கண்கள் குருடாக்கப்பட்டன (அப். 9:1-18). இங்கே யெஷுஆவின் உயிர்த்தெழுந்த சரீரத்தின் மகிமையை மறைத்திருந்த திரை ஓர் அளவு நீங்கியது. மேலும் நாம்

*“சிறந்த மகிமையாக” இருந்த அந்த மகிமையைப் பற்றி ஓரளவிற்கு அறிந்து கொள்கிறோம்.*

*63. பரிசுத்த பவுல் உள்பட சீஷர்களுக்கு உயிர்த்தெழுந்த யெஷுஆ காணப்பட்டார் என்பது பற்றிய நமது சுருக்கமான ஆராய்ச்சியை, அவை முற்றிலும் மூன்று காரியங்களைக் காட்டுகின்றன என்ற குறிப்போடு முடித்துக்கொள்வோம்.*

*I. யெஷுஆ தமது உயிர்த்தெழுதலுக்கும், பரமேறுவதற்கும் இடையில் சீஷர்களுக்கு காண்பித்த சரீரங்களில் ஒன்றும் அவருடைய உயிர்த்தெழுந்த சரீரம் அல்ல. மாறாக அவைகள் சந்தர்ப்பங்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு பலவிதமாக உருவாக்கப்பட்டவை.*

*II. யெஷுஆ சிலுவையிலறையப்பட்ட அந்த சரீரத்தோடு அல்லது மானிட சரீரத்தோடு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழவில்லை.*

*III. யெஷுஆ நடுப்பகலில் சூரியனுக்குரிய பிரகாசத்தைவிட அதிக மகிமையான ஆவி சரீரத்தில் -தெய்வீக தன்மையான ஒரு சரீரத்தில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்.*

*இந்த விதமாக, இதுவரை கூறப்பட்ட காரியங்களெல்லாம், நமது கர்த்தரின் இரண்டாம் வருகை மாம்சகண்களால் காணக்கூடாததாயும், மனக்கண்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதாயும் இருக்கிறது என்றும் நிரூபிக்கிறது.*

*s*

**வேதாகம சத்தியத்தின் அடிப்படையில் கீழ்கண்ட தலைப்புகள் பற்றி மேலும் அறிய விரும்புகிறீர்களா ?**

- **எது சத்தியம்?**
- **நரகம் என்றால் என்ன?**
- **நியாயத்தீர்ப்பு நாள்**
- **பூமியில் தேவ ஆளுகை**
- **ஐசுவரியவானும் லாசரும்**

**மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ள :**


மல்கியா 4:2

யோவான் 17:17

# மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

Br. A.Thambidurai

88 Salai street, Oulgaret, Puducherry 605010.

**Email:**athambithurai@gmail.com **Ph: +919442290098**

**சேலம் : +91 9944772503**

**கோவை : +91 9442215703**

**சென்னை : +91 8695981393**

**பெங்களூரு : +91 9036145140**